பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

19 05 2024 **SUNDAY** 7 15 **PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களவை தேர்தலில் வெற்றி பெற்று, மீண்டும் ஆட்சியமைத்தால் ஊழல் முறைகேடுகளில் ஈடுபட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அக்கட்சியின் மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த மூத்த தலைவர்களை கைது செய்ய பிஜேபி திட்டமிட்டு வருவதாக அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால் குற்றம் சாட்டியுள்ளார்.

3. ஒடிசா சட்டப்பேரவைக்கு இரண்டாவது கட்டமாக 35 தொகுதிகளில் வாக்குப்பதிவு நாளை நடைபெறவுள்ளது.

4. நாட்டின் வடகிழக்கு மாநிலங்களில் அடுத்த 4 தினங்களுக்கு கடும் வெப்பஅலை நிலவும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. ஐபிஎல். கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா – ராஜஸ்தான் அணிகளுக்கு இடையேயான ஆட்டம் மழை காரணமாக தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

>>>>><<<<<

மக்களவைக்கு எஞ்சியுள்ள 6வது மற்றும் 7ஆம் கட்ட தேர்தல் நடைபெறும் தொகுதிகளில் பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

ஆறாம் கட்ட தேர்தல் இம்மாதம் 25ஆம் தேதியும், 7வது கட்ட தேர்தல் அடுத்த மாதம் 1ஆம் தேதியும் நடைபெறவுள்ளது.

ஜார்க்கண்ட் மற்றும் மேற்குவங்க மாநிலத்தில் பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி பிரச்சாரம் மேற்கொண்டார்.

மேற்குவங்க மாநிலம், **Purulia** மக்களவை தொகுதியில் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், குடியுரிமை சட்டத்தின் நடைமுறைகள் தொடங்கி விட்டதகவும், காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அதனை தடுத்து நிறுத்த முடியாது என்று கூறினார்.

மக்களவை தேர்தலில் பிஜேபி வெற்றி பெற்று மீண்டும் ஆட்சியமைத்தவுடன், ஊழலில் ஈடுபட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

ஷெட்யூல்டு மற்றும் பழங்குடியின மக்களின் நலனில் திரிணாமுல் காங்கிரஸ் தலைமையிலான அரசு அக்கறை கொள்ளவில்லை என்று அவர் குறை கூறினார்.

எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி வெற்றிபெற்று ஆட்சியமைத்தால், இடஒதுக்கீட்டை நீக்கி விடுவார்கள் என்று அவர் தெரிவித்தார்.

மத அடிப்படையிலான இடஒதுக்கீட்டு முறைக்கு டாக்டர் அம்பேத்கர் ஆதரவு அளிக்கவில்லை என்று திரு. நரேந்திர மோடி கூறினார்.

ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த மூத்த தலைவர்களை கைது செய்ய பிஜேபி திட்டமிட்டு வருவதாக அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில், இதுபோன்ற நடவடிக்கைகள் மூலம் ஆம் ஆத்மி கட்சியை பிஜேபி அழிக்க முயற்சிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த தலைவர்களின் வங்கிக் கணக்குகளை முடக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அமலாக்கத்துறை வழக்கறிஞர், நீதிமன்றத்தில் தெரிவித்திருந்ததை திரு. அரவிந்த் கெஜ்ரிவால் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

>>>>><<<<<

மக்களவைக்கு 5வது கட்டமாக நாளை வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 6 மாநிலங்கள் மற்றும் இரண்டு யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 49 தொகுதிகளில் அனைத்து முன்னேற்பாட்டுப் பணிகளையும் தேர்தல் ஆணையம் செய்துள்ளது.

உத்தரப்பிரதேசத்தில் 14 தொகுதிகளிலும், மகாராஷ்டிராவில் 13, மேற்குவங்கத்தில் 7, பீஹார் மற்றும் ஒடிசாவில் தலா 5, ஜார்கண்டில் 3, ஜம்மு-கஷ்மீர் மற்றும் லடாக்கில் தலா ஒரு தொகுதியிலும் நாளை வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

இந்த தொகுதிகளில் 94 ஆயிரத்து 732 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டு, 9 லட்சத்து 47 ஆயிரத்திற்கும் கூடுதலான தேர்தல் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

காலை 7 மணிக்கு தொடங்கும் வாக்குப்பதிவு, மாலை 6 மணியுடன் நிறைவடைகிறது.

வாக்குச்சாவடி மையங்களில் வாக்காளர்கள் வாக்களிக்க ஏதுவாக, நிழற்பந்தல், குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள் ஆகியோர் வாக்களிக்க ஏதுவாக சக்கர நாற்காலிகள் மற்றும் சாய்தள வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

100 சதவீத வாக்குப்பதிவை உறுதி செய்யும் வகையில் தேர்தல் ஆணையம் விரிவான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் செய்துள்ளது.

வாக்குப்பதிவு நடைபெறும் தொகுதிகளில் நிலவும் கடும் வெப்பநிலையை கருத்தில் கொண்டு, வாக்காளர்களுக்கு தேவையான போதிய வசதிகளை ஏற்படுத்தி தருமாறு மாவட்ட தேர்தல் அதிகாரிகள், மாநில நிர்வாகங்களுக்கு தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

கடந்த 4 கட்டங்களாக 379 மக்களவைத் தொகுதிகளுக்கு வாக்குப்பதிவு அமைதியாகவும், சுமுகமாகவும் நடைபெற்றுள்ளது. இந்நிலையில், ஒடிசா மாநிலத்தில் இரண்டாவது கட்டமாக 35 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு நாளை வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

>>>>><<<<<

லடாக் மக்களவை தொகுதியில் வாக்குப்பதிவு நேர்மையாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் நடைபெறுவதை உறுதி செய்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட தேர்தல் அதிகாரி மற்றும் கார்கில் காவல்துறையினர் உறுதி தெரிவித்துள்ளனர்.

மொத்தம் 279 வாக்குச்சாவடி மையங்களில் 118 மையங்கள் மிகவும் பதற்றமானவையாக கண்டறியப்பட்டுள்ளதாகவும், அங்கு வாக்களிக்க ஏதுவாக விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதற்றமானவையாக கண்டறியப்பட்டுள்ள 140 வாக்குச்சாவடிகளில் வெப்கேமராக்கள் மூலம் வாக்குப்பதிவு நடவடிக்கைகள் கண்காணிக்கப்படவுள்ளது.

இதற்கென மாவட்ட தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் பிரத்யேக கட்டுப்பாட்டு அறை ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இத்தகைய வாக்குச்சாவடிகளில் மத்திய ஆயுத காவல்படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

>>>>><<<<<

ஜம்மு காஷ்மீரில் வாக்களிப்பதை ஊக்குவிக்கும் விதத்தில், முன்னெப்போதும் இல்லாத வகையில், வாக்காளர்களின் வீடுகளுக்கே நேரடியாக சென்று, வாக்களிக்கச் செய்யும் பணிகளை அம்மாவட்ட தேர்தல் அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

பூஞ்ச் மாவட்டத்தில் இதற்கென பதிவு செய்துள்ள ஆயிரத்து 100 வாக்காளர்களின் வீடுகளுக்குச் சென்று, வாக்குப்பதிவை மேற்கொள்ளும் வகையில் 105 பிரத்யேக குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த முறையின் கீழ், ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில், பூஞ்ச் மாவட்டத்தைச் சேர்ந்த வாக்காளர்கள் அதிக எண்ணிக்கையில் பதிவு செய்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

தேர்தல் நடத்தை நெறிமுறைகளை மீறியது தொடர்பான புகார்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு **C-Vigil** செயலி சிறந்த முறையில் செயல்படுவதாக ஹரியானா மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு. அனுராக் அகர்வால் தெரிவித்துள்ளார்.

பெரிய மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் ஹரியானா மாநிலத்தைச் சேர்ந்த வாக்காளர்கள் இந்த செயலியை சிறப்பான முறையில் பயன்படுத்தி வருவதாக குறிப்பிட்டார்.

இந்த செயலியின் மூலம் இதுவரை ஆறாயிரத்து 540 விதிமீறல் தொடர்பான புகார்கள் பெறப்பட்டுள்ளதாகவும், அவற்றில் 6 ஆயிரத்து 523 புகார்களுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். தேர்தலின் போது, வாக்காளர்களை அச்சுறுத்துதல் உள்ளிட்ட விதிமீறல் தொடர்பான புகார்களுக்கு, சி-விஜில் செயலியின் மூலம் தேர்தல் ஆணையத்திற்கு புகார் அளித்தால், விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று திரு. அனுராக் அகர்வால் தெரிவித்துள்ளார்.

**>>>>><<<<<**

தில்லியில் பிஜேபி தலைமையகத்தை நோக்கி பேரணியாக செல்ல முயன்ற ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த தொண்டர்களை தில்லி காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய தில்லி காவல் ஆணையர் திரு. எம். ஹர்ஷவர்தன், இப்பகுதியில் 144 தடை உத்தரவு அமலில் இருப்பதாகவும், பேரணி நடத்த அனுமதி அளிக்கப்படவில்லை என்றும் கூறினார். இந்நிலையில், பிஜேபி தலைமையகம் அமைந்துள்ள பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>>><<<<<**

கேரள மாநிலம், இடுக்கி மாவட்டத்தில் சிலந்தி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட முயற்சிக்கும் அம்மாநில அரசின் நடவடிக்கைகளுக்கு தமிழக எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி பழனிசாமி கண்டனம் தெரிவித்துள்ளார். சமூகவலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், அமராவதி அணைக்கு வரும் தண்ணீரை தடுக்கும் வகையில், அம்மாநில அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார். அரசியல் ஆதாயங்களுக்காக நதிநீர் தொடர்பான உரிமைகளை நிலைநாட்டுவதில் மாநில அரசு மெத்தனமாக செயல்பட்டு வருவதாகவும் அவர் குறை கூறியுள்ளார்.

தமிழகத்தின் உரிமைகளை நிலைநாட்ட மாநில அரசு சட்டரீதியிலான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று திரு. எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

**>>>>><<<<<**

தைவானின் புதிய அதிபராக திரு. **Lai Ching-Te** நாளை பொறுப்பேற்கிறார்.

கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற அதிபர் தேர்தலில் அவர் வெற்றிபெற்றார்.

தற்போதைய அதிபரான திரு. **Tsai Ing-Wen**-ன் இரண்டாவது பதவிக்காலத்தில் கடந்த 4 ஆண்டுகளாக அவர், துணை அதிபராக பதவி வகித்தார்.

இந்நிலையில், நாளை நடைபெறவுள்ள பதவியேற்பு விழாவில் கலந்து கொள்ள வருகை தரும் தலைவர்களை வரவேற்கும் விதமான சிறப்பு நிகழ்ச்சி ஒன்று இன்று நடைபெற்றது.

>>>>><<<<<

நாட்டின் வடகிழக்கு மாநிலங்களில் அடுத்த 4 தினங்களுக்கு கடும் வெப்பஅலை நிலவும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

மத்தியப் பகுதியில் அடுத்த 5 நாட்களில் வெப்பநிலை 2 டிகிரி முதல் 4 டிகிரி செல்சியஸ் வரை படிப்படியாக உயரக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

இந்நிலையில், தென்மாநிலங்களில் அடுத்த 3 நாட்களுக்கு கனமழை முதல் அதிகனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகம் மற்றும் கேரளா மாநிலங்களில் ஒரு சில இடங்களில் நாளை மறுநாள்வரை கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

கேரளாவில் பத்தனம்திட்டா, கோட்டையம் மற்றும் இடுக்கி மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என்ற வானிலை ஆய்வு மையத்தின் அறிவிப்பை அடுத்து சிவப்பு நிற எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

திருவனந்தபுரம், கொல்லம், ஆலப்புழா மற்றும் எர்ணாகும் மாவட்டங்களில் ஆரஞ்ச் நிற எச்சரிக்கையும், திருச்சூர், பாலக்காடு, மலப்புரம், கோழிக்கோடு மற்றும் வயநாடு மாவட்டங்களில் மஞ்சள் நிற எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, தெற்கு அந்தமான் மற்றும் அதனை ஒட்டிய கடல்பகுதிகளில் தென்மேற்கு பருவமழை இன்று தொடங்கியுள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்தமிழக கடலோரப் பகுதிகளில் சூறாவளி காற்று வீச வாய்ப்புள்ளதால் மீனவர்கள், கடலில் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்றும் அந்த மையம் அறிவுறுத்தியுள்ளது.

>>>>><<<<<

குவஹாத்தியில் நடைபெறவுள்ள ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா - ராஜஸ்தான் அணிகளுக்கு இடையேயான ஆட்டம் மழை காரணமாக தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

முன்னதாக, பஞ்சாப் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 4 விக்கெட் வித்தியாசத்தில் ஹைதராபாத் அணி வெற்றி பெற்றது.

ஹைதராபாதில் நடைபெற்ற இப்போட்டியில், 215 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய ஹைதராபாத் அணி 19 புள்ளி ஒரு ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 215 ரன் எடுத்தது.

>>>>><<<<<

வியட்நாமில் நடைபெற்று வரும் ஆசிய டேக்வோண்டா சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் ஷானாஸ் பர்வீன் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>END<<<<<